பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**09 12 2025 TUESDAY 7.15 PM**

ஆகாஷவாணி

*<u>தலைப்புச் செய்திகள்</u>*

1. கைவினைப் பொருட்கள் உற்பத்தித் துறையில் மகளிரின் பங்களிப்பை ஊக்குவிக்க வேண்டும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கேட்டுக்கொண்டுள்ளார்.

2. வந்தே மாதரம் தேசிய பாடல் நாட்டுப்பற்றையும், தியாகத்தையும், தேசிய உணர்வையும் மக்களிடையே ஏற்படுத்தி உள்ளதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

3. இந்தியாவும் — பங்களாதேஷும் சிறை பிடிக்கப்பட்ட மீனவர்களை பரஸ்பரம் விடுவித்துள்ளன.

4. இந்திய — நேபாள இரண்டு நாள் கூட்டு ராணுவ பயிற்சி சூரியகிரண் உத்தராகண்டின் **Pithoragarh**-ல் நடைபெற்றது.

5. ஒடிஷா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Saneeth Dayanand, Darshan Pujari** ஆகியோர் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>

கைவினைப் பொருட்கள் உற்பத்தித் துறையை ஊக்குவிப்பதன் மூலம் இந்த துறையில் ஈடுபட்டுள்ள மகளிருக்கான அதிகாரம் உறுதி

செய்யப்படும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று **2023** மற்றும் **2024**-ஆம் ஆண்டுகளுக்கான தேசிய கைவினைப் பொருட்களுக்கான விருதுகளை வழங்கி பேசிய அவர், கைவினைப் பொருட்கள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளவர்களில் **68** சதவீதம் பேர் பெண்கள் என்றும் தெரிவித்தார்.

**20** விருதுகள் பெண்களுக்கு அளிக்கப்படுவது குறித்து தாம் மகிழ்ச்சி அடைவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் பல வகையான கலாச்சாரங்கள், கலைப்பொருட்கள் மூலம் இணைக்கப்படுவதாக அவர் கூறினார்.

**32** லட்சத்திற்கும் மேற்பட்டோர் இத்தொழிலில் ஈடுபட்டிருப்பதாகவும், இதில் கிராமப்புறங்களை சேர்ந்தவர்கள் அதிக அளவில் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திரு கிரிராஜ் சிங், கைவினைப்போருட்களுக்கான சரக்கு மற்றும் சேவை வரியை **18** சதவீத்தில் இருந்து ஐந்த சதவீதமாக குறைந்திருப்பது இப்பொருட்களின் உற்பத்திக்கு உத்வேகம் அளித்திருப்பதாக தெரிவித்தார்.

2031-32-ஆம் ஆண்டிற்குள் கைவினைப் பொருட்கள் ஏற்றுமதியை ஒரு லட்சம் கோடி ரூபாயாக உயர்த்துவதற்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் திரு கிரிராஜ் சிங் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

வந்தே மாதரம் தேசிய பாடல் நாட்டுப்பற்றையும், தியாகத்தையும், தேசிய உணர்வையும் மக்களிடையே ஏற்படுத்தி உள்ளதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் இன்று வந்தே மாதரம் தேசிய பாடலின் 150-ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடைபெற்ற விவாதத்தில் பேசிய அவர், சுதந்திரப் போராட்ட இயக்கத்திற்கு வந்தே மாதரம் பாதை வகுத்து கொடுத்ததாக தெரிவித்தார்.

பாரத அன்னைக்கு அர்ப்பணிப்பு உணர்வோடு கடமையாற்ற வேண்டும் என்ற விழிப்புணர்வை, என்றும் அழியாத இந்த தேசிய பாடல் உருவாக்கி இருப்பதாகவும் அவர் கூறினார்.

நாட்டின் சுதந்திர வேட்கையை உருவாக்க எழுதப்பட்ட வந்தே மாதரம் பாடல் தற்போது 2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த பாரத்தை உருவாக்க வேண்டும் என்ற உணர்வை ஊட்டுவதற்கும் பயன்படுவதாக அவர் தெரிவித்தார்.

வந்தே மாதரம் பாடல் மூலம் கவிஞர் **Bankim Chandra Chattopadhyay,** நாட்டை அன்னையாக மதிக்க வேண்டும் என்ற கலாச்சாரத்தை உருவாக்கியதாகவும் அவர் கூறினார்.

கஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை வந்தே மாதரம் மக்களின் மனதை தொட்டதாகவும் திரு அமித் ஷா தெரிவித்தார்.

இந்த விவாதத்தின் மீது பேசிய எதிர்க்கட்சித்தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே, சுதந்திரப் போராட்டத்தின் வீர முழக்கமாக வந்தே மாதரம் திகழ்ந்தது என்று குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>>

கலப்பட உர விற்பனை மற்றும் பதுக்கலை தடுக்க மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக ரசாயன மற்றும் உரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா தெரிவித்துள்ளார்

மாநிலங்களவையில் இதை தெரிவித்த அமைச்சர், உர உற்பத்தி மற்றும் விற்பனை முறைகேட்டில் ஈடுபட்ட **12** ஆயிரத்து **814** நிறுவனங்களுக்கு மத்திய அரசு நோட்டீஸ் அனுப்பியுள்ளதாகவும் கூறினார்.

கள்ளச்சந்தையில் ஈடுபட்ட மற்றும் போலி உரங்களை தயாரித்த **3** ஆயிரத்திற்கும் மேற்பட்ட நிறுவனங்களின் உரிமங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

உரப் பதுக்கலில் ஈடுபட்ட **202** நிறுவனங்களின் உரிமங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

நாட்டின் பல்வேறு மாநிலங்களின் உரத் தேவையை கண்காணிக்க ஒருங்கிணைந்த கண்காணிப்பு அமைப்பு ஒன்றை மத்திய அரசு அமைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

உர உற்பத்தியாளர்கள், ஏற்றுமதியாளர்கள் ஆகியோருடன் மாநில அரசுகள் நேரடி தொடர்பில் இருக்க வேண்டும் என்றும், போதிய உரம் கையிருப்பில் உள்ளதை உறுதி செய்ய வேண்டும் என்றும் திரு ஜெ பி நட்டா வலியுறுத்தினார்.

<<<<<<>>>>>>

நாட்டில் **2014**-ஆம் ஆண்டு நான்கு புள்ளி ஒன்பது ஏழு சதவீதமாக இருந்த வாராக்கடன்களின் அளவு தற்போது இரண்டு புள்ளி மூன்று சதவீதமாக குறைந்துள்ளது என்று நிதித்துறை இணையமைச்சர் திரு பங்கஜ் சௌத்ரி தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அமைச்சர், கடந்த பத்தாண்டுகளில் மத்திய அரசு மேற்கொண்ட உறுதியான கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகளால் இதன் அளவை குறைக்க முடிந்ததாக குறிப்பிட்டார்.

2014-ஆம் ஆண்டு 11 புள்ளி ஒன்று நான்கு சதவீதமாக இருந்த வங்கிக்கடன் வசூல் 2025-26-ஆ ஆண்டில் 47 புள்ளி எட்டு ஐந்து சதவீதமாக உயர்ந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

பெரிய நிறுவனங்கள் பெற்ற கடனை அரசு தள்ளுபடி செய்ததாக கூறப்படுவதை திட்டவட்டமாக மறுப்பதாகவும் திரு பங்கஜ் சௌத்ரி தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

நாடு முழுவதும் 9 மாநிலங்கள் மற்றும் 3 யூனியன் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளின்கீழ், இதுவரை 99 புள்ளி ஒன்பது ஏழு சதவீத வாக்காளர் படிவங்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இதன்படி, 50 கோடியே 95 லட்சத்து 77 ஆயிரத்து 592 வாக்காளர் படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இவற்றில், 99 புள்ளி ஒன்று எட்டு சதவீத வாக்காளர் படிவங்கள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், மத்தியப்பிரதேசம், சட்டீஸ்கர், குஜராத், கோவா மாநிலங்களிலும், புதுச்சேரி, லட்சத்தீவு, அந்தமான் நிக்கோபார் தீவுகள்

ஆகிய யூனியன் பிரதேசங்களிலும் **100** சதவீதம் வாக்காளர் படிவங்கள் விநியோகிக்கப் பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

மத்தியப்பிரதேசத்திலும், லட்சத்தீவிலும் **100** சதவீத படிவங்கள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

இந்திய — நேபாள இரண்டு நாள் கூட்டு ராணுவ பயிற்சி சூரியகிரண் உத்தராகண்டின் **Pithoragarh-**ல் நடைபெற்றது.

இதில் ராணுவ திட்டமிடல், ஒருங்கிணைந்த தாக்குதல், தீவிரவாதத்தை கட்டுப்படுத்துவதற்கான அணுகுமுறைகள் ஆகியவை குறித்து விரிவான பயிற்சி அளிக்கப்பட்டது.

உடற்தகுதியை மேம்படுத்துவது, நவீன பாதுகாப்பு தொழில்நுட்பங்கள், ராணுவ கண்காணிப்பு நடவடிக்கைகள் ஆகியவை குறித்தும் விரிவான பயிற்சி வழங்கப்பட்டது.

ட்ரோன்களின் பயன்பாடு, இரவுநேர தாக்குதல்களை கண்காணித்து முறியடிப்பது, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் அடிப்படையிலான கண்காணிப்பு கட்டமைப்புகள் ஆகியவை குறித்தும் இந்திய — நேபாள ராணுவ வீரர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

<<<<<<>>>>>>

இந்தியாவும் — பங்களாதேஷும் சிறை பிடிக்கப்பட்டுள்ள மீனவர்களை பரஸ்பரம் விடுவித்துள்ளன.

இந்திய தரப்பில் 38 மீனவர்களும், பங்களாதேஷ் தரப்பில் 47 மீனவர்களும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கைது செய்யப்பட்ட இந்த மீனவர்களின் படகுகளும் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக இந்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், நல்லெண்ண மற்றும் மனிதாபிமான அடிப்படையில் இருதரப்பிலும் மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

தமிழகத்தின் நீலகிரி மாவட்டம் குன்னூரில் உள்ள வெலிங்டன் ராணுவ பயிற்சி கல்லூரியில் தேசிய மாணவர் படை பட்டதாரி மாணவர்களுக்கான 14 நாள் பயிற்சி தொடங்கப்பட்டுள்ளது.

கோவை, திருச்சி, சேலம், புதுச்சேரி, அந்தமான் நிக்கோபார் தீவுகள் ஆகிய பகுதிகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 54 பட்டதாரி மாணவர்கள் இப்பயிற்சியில் பங்கேற்றுள்ளனர்.

இப்பயிற்சி ராணுவத்தில் சேருவது குறித்த முக்கியத்துவத்தை மாணவர்கள் அறிந்துகொள்வதற்கான வாய்ப்பை வழங்கியுள்ளதாக சுபேதார் மேஜர் **Chidanand** தெரிவித்தார்.

***(Voice Byte — மேஜர் Chidanand -24 Sec.)***

இப்பயிற்சியில் பாதுகாப்பு தொடர்பான நவீன தொழில்நுட்ப உத்திகளும் தங்களுக்கு கற்று தரப்பட்டதாக பயிற்சி பெற்ற மாணவர் ஒருவர் தெரிவித்தார்.

***(Voice Byte — மாணவர் — 25 Sec.)***

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஒடிஷா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Saneeth Dayanand, Darshan Pujari** ஆகியோர் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

கட்டாக்கில் இன்று தொடங்கிய இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில், **Saneeth Dayanand 21-11, 21-13** என்ற செட் கணக்கில் **Dhruv Negi-**ஐ வென்றார்.

மற்றொரு முதல் சுற்றில் **Dharshan Pujari 21-9, 21-12** என்ற செட் கணக்கில் அமெரிக்காவின் **Kevin Walter -**ஐ வென்றார்.

**<<<<<<END>>>>>>**